சுருக்கம்

சிறுபான்மையினர் நலன் – கிறித்துவ தேவாலயங்களை பழுது பார்த்தல் மற்றும் புனரமைத்தல் பணிகளுக்கு நிதியுதவி வழங்கும் திட்டம் – ஏற்கனவே அனுமதிக்கப்பட்டுள்ள பணிகளுடன், சில கூடுதல் பணிகளைச் சேர்த்தல் மற்றும் மானியத் தொகை உயர்த்தி வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல(சிநஆபி1)த் துறை

அரசாணை (நிலை) எண்.32

நாள் 11.03.2024
திருவள்ளுவர் ஆண்டு 2055
சோபகிருது, மாசி–28

படிக்கப்பட்டது:–

1. அரசாணை (நிலை) எண்.71, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 20.12.2016.
2. அரசாணை (நிலை) எண்.19, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 21.03.2023.
3. சிறுபான்மையினர் நல இயக்குநரின் கடித எண்.அ4/3305/2020, நாள் 16.11.2023.

*********

ஆணை:–

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின் மூலம், தமிழகத்தில் உள்ள கிறித்துவ தேவாலயங்களைப் புனரமைத்தல் மற்றும் பழுது நீக்குதல் பணிகள் மேற்கொள்வதற்காக நிதியுதவி அளிக்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகிறது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின் மூலம், மேற்படி திட்டத்தின் கீழ் கூடுதல் பணிகளாக தேவாலயங்களில் பீடம் கட்டுதல், கழிவறை வசதி அமைத்தல், குடிநீர் வசதிகள் உருவாக்குதல் போன்ற பணிகள் மேற்கொள்ளவும், திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டு வந்த மானியத்தினை அதிகபட்சமாக ரூ.6.00 இலட்சம் வரை நிதியுதவி வழங்க ஆணையிடப்பட்டது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், தேவாலய கட்டிடங்கள் பராமரிப்பு பணிகளுக்கான மூலதனப் பொருட்களின் விலை ஏற்றத்தினை கருத்தில் கொள்ளும் பட்சத்தில் தற்போது வழங்கப்படும் நிதியுதவி மிகக் குறைவாக இருப்பதனால் தேவாலயங்களில் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு பணிகளுக்கான மானியம் பெறுவதற்கான விண்ணப்பங்கள் மிகக் குறைந்த

அளவிலேயே வருகின்றன என்று சிறுபான்மையினர் நல இயக்குநர் தெரிவித்துள்ளார். எனவே, கிறித்துவ தேவாலயங்கள் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ள மானியம் வழங்கும் திட்டத்தில் தற்போது நடைமுறையில் உள்ள வழிகாட்டு நெறிமுறைகளில் சில கூடுதல் பணிகள் மேற்கொள்ளவும், மேலும் தற்போதைய விலைவாசி உயர்வினை கருத்திற்கொண்டு மானியத் தொகையினை உயர்த்தி வழங்கிட ஏதுவாக ஆணை பிறப்பிக்குமாறு சிறுபான்மையினர் நல இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. சிறுபான்மையினர் நல இயக்குநரின் கருத்துருவை அரசு நன்கு பரிசீலனை செய்து, அதனை ஏற்று, கிறித்துவ தேவாலயங்கள் பழுதுபார்த்தல் மற்றும் புனரமைத்தலுக்கு மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ், ஏற்கனவே அனுமதிக்கப்பட்டுள்ள பணிகளுடன், பின்வரும் கூடுதல் பணிகள் / வசதிகள் மேற்கொள்ள அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது:-

(i) சுவிசேஷம் வாசிக்கும் ஸ்டாண்ட், மைக்செட் மற்றும் ஒலிப்பெருக்கி;

(ii) நற்கருணை பேழை பீடம்;

(iii) திருப்பலிக்கு தேவையான கதிர் பாத்திரங்கள், சுரூபங்கள், மெழுகுவர்த்தி ஸ்டான்ட்கள் மற்றும் பக்தர்கள் அமர்ந்து முழங்காலிட்டும் இருக்க தேவையான பெஞ்சுகள் போன்ற ஆலயங்களுக்கு தேவையான உபகரணங்கள்;

(iv) தேவாலயத்திற்கு சுற்றுச்சுவர் வசதி அமைத்தல்.

அத்துடன், இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் மானியத்தை பின்வருமாறு உயர்த்தி வழங்கியும் அரசு ஆணையிடுகிறது:-

| வ. எண். | தேவாலய கட்டடத்தின் நிலை | தற்போது வழங்கப்பட்டு வரும் மானியம் (ரூ) | உயர்த்தி வழங்கப்படும் மானியம் (ரூ) |
|---|---|---|---|
| 1 | 10-15 வருடம் வரை | 2 இலட்சம் | 10 இலட்சம் |
| 2 | 15-20 வருடம் வரை | 4 இலட்சம் | 15 இலட்சம் |
| 3 | 20 வருடத்திற்கு மேல் | 6 இலட்சம் | 20 இலட்சம் |

5. இவ்வரசாணை நிதித்துறையின் ஒப்புதலை அதன் அலுவல் சார்பற்ற எண்.e-Office File No.6102208/MWRU1/2023, Note#14, நாள் 05.03.2024-இல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ரீட்டா ஹரீஷ் தக்கர்
அரசு செயலாளர்

பெறுநர்
இயக்குநர்,
சிறுபான்மையினர் நலன், சென்னை-5.

மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார
மேம்பாட்டுக் கழகம், சென்னை-05.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்,
அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல அலுவலர்கள்,
மாவட்ட சிறுபான்மையினர் நல அலுவலர்கள்,
சென்னை, வேலூர், விழுப்புரம், கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி.
மாநில கணக்காயர், சென்னை-18.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-8.
நகல்:
மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ்
தமிழர் நலத்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர்,
தலைமைச் செயலகம், சென்னை-9.
நிதி (பி, மிபி (ம) சிந) துறை, தலைமைச் செயலகம், சென்னை-9.
அரசு செயலாளரின் முதுநிலை முதன்மை தனிச் செயலர்,
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத்துறை, தலைமைச் செயலகம், சென்னை-9.
இருப்புக் கோப்பு / உபரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

11/3/24
பிரிவு அலுவலர்